Crl.M.P .No.660/2024
dt- 06-05-2024

புகார்தாரர்– தமிழ்ராஜ்
த/பெ. அந்தோனி என்ற திருப்பதி

புகார்தாரரின் பிரமாண வாக்குமூலம்.

சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

நான் விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தாலுகா, மீனாட்சிபுரம் அஞ்சல், எண். சண்முகசுந்தரபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் வழக்கறிஞர் குமாஸ்தாவாக கடந்த 35 ஆண்டுகளாக திருவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 27.12.2019 அன்று எனது ஊரில் இருந்து சுமார் 02.00 மணியளவில் இந்திரா நகர் ஓட்டுச்சாவடியில் வாக்களித்துவிட்டு எங்கள் ஊரைச் சேர்ந்த மாரியம்மாள் வீட்டிற்கு முன்பு நானும், எனது அப்பா அந்தோனி என்ற திருப்பதியும், காலனியைச்சேர்ந்த சுப்பிரமணி மகன் கடற்கரை என்பவரும் பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது நேரம் மதியம் 03.30 இருக்கும். அப்போது எங்கள் குடும்பத்திற்கும், எங்கள் ஊரைச்சேர்ந்த முத்துச்சாமி குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து திருவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் உரிமையியல்வழக்கு நடந்து வருகிறது. அதை மனதில் வைத்துக்கொண்டு எங்கள் ஊரைச்சேர்ந்த முத்துச்சாமி மகன்கள் முருகராஜ், காளிமுத்து, சித்திரைகனி ஆகிய மூன்று நபர்களும் என்னிடம் வந்து ஏன்டா கூதிமகனே என்று சொல்லி முருகராஜ்எ னது இடது கன்னத்தில் அடித்தார். அதில் நான் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். காளிமுத்து, சித்திரைகனி ஆகிய இருவரும் என்னை தரதரவென்று இழுத்து, கையாலும், கம்பாலும் மாறிமாறி அடித்து எத்தினார்கள். அதனால் எனக்கு வலது முழங்கையில் காயமும், பின்பக்க தலையிலும் காயம் ஏற்பட்டது. அதை தடுக்க வந்த எனது அப்பாவை முருகராஜ் மறைத்து வைத்திருந்த இரும்பு கம்பியால் எனது அப்பாவின் வலது காலிலும், நெஞ்சிலும் கம்பியால் அடித்தார். அதில் எனது அப்பாவிற்கு வலது முழங்காலில் கொடுங்காயமும், இடது நெஞ்சில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது. அப்போது நானும், எனது அப்பாவும் சத்தம்போட்டவுடன் அதே ஊரைச்சேர்ந்த காளிமுத்து மகன் முத்துக்குமார் என்ற வெள்ளையன்,

சிவபிரகாசம் மகன்கள் புதுராஜ் என்ற போத்திராஜ், கோபி, வெங்கடேசன் மகன்கள் முனியராஜ், கார்த்திக், முருகராஜ் மகன் செல்லப்பாண்டி, வீரபுத்திரன் மகன் ஜெயக்கொடி, ஜெயக்கொடி மகன் விஜயராகவன் ஆகியோர்கள் என்னை இழுத்து கீழே தள்ளி மிதித்து கம்பாலும், கையாலும் மாறி மாறி அடித்தார்கள். ஜெயக்கொடி வைத்திருந்த கம்பால் என்னையும் எனது அப்பாவினையும் உடம்பிலும், முதுகிலும் மாறி மாறி அடித்தார்கள். ஜெயக்கொடி வைத்திருந்த கம்பை வாங்கி முத்துக்குமார் என்ற வெள்ளையன் என்னையும், எனது அப்பாவினையும் உடம்பில் மாறி மாறி அடித்தார். அடித்ததில் இடது கை ஆள்காட்டி விரலில் சிராய்ப்பு காயமும், வலது ஆள்காட்டிவிரலில் சிராய்ப்பு காயமும், இடது தொடையில் வீக்கக்காயமும், முன்பக்க மண்டையில் காயமும் ஏற்பட்டது. எனது அப்பாவிற்கு இடது பக்க மண்டையில் காயம் ஏற்பட்டது. மீண்டும் முருகராஜ் ஒரு பெரிய கல்லை எடுத்து என்னை நோக்கி எறியவந்தார். அப்போது எங்கள் ஊரைச்சேர்ந்த இருளப்பன் மகன் செல்வம் அந்த கல்லை வாங்கி தூரப்போட்டுவிட்டார். நான் கையில் வைத்திருந்த செல்போனை பிடிங்கி எறிந்தார்கள். கையில் கட்டியிருந்த வாட்சையும் பிடுங்கினார்கள். அது கீழே விழுந்துவிட்டது. நான் அடிவாங்கியதால் வலி தாங்கமுடியாமல் ஓட்டுச்சாவடிக்கு சென்று அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவலர்களிடம் நடந்த சம்பவத்தினை அழுதுகொண்டே சொன்னேன். அப்போது என்னையும், எனது அப்பாவையும் பார்த்து மேற்படி நபர்கள் இன்னைக்கு தப்பித்துவிட்டீர்கள் என்னைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன்எ ன்று மிரட்டி விட்டு சென்றார்கள். அப்போது நானும், எனது அப்பாவும் 108 ஆம்புலன் மூலம் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தோம். நானும், எனது அப்பாவும் சிகிச்சையில் இருந்ததை தெரிந்த திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய ஆய்வாளர் வந்து என்னிடம் நடந்த சம்பவத்தினை விசாரித்தார். அப்போது எனது இரண்டு கைகளிலும் காயம் ஏற்பட்டதாலும், நான் பதற்றமாக இருந்ததாலும் எனது மகள் சாரதபிரியா நான் சொல்லச்சசொல்ல புகார் மனு எழுதிக்கொடுத்த புகாரினை பெற்றுக்கொண்டு திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய குற்ற எண். 648/2019 பிரிவுகள் –147, 148, 294(பி), 323, 324, 506(2) இதச வாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. நான் மேற்படி சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டபோது எங்கள் ஊரைச்சேர்ந்த மாரியம்மாள் வீட்டில் CCTV கேமரா பதிவு பதிவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி கேமரா பதிவினை

பார்த்து தான் மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட சித்திரைகனி மகன் மதன்குமார், வேலு மகன் காளியப்பன், காளிமுத்து மகன் அய்யனார், முத்துசாமி மகன் ராமராஜ், வெங்கடேஷ் மகன் சதீஸ்குமார், சிவபிரகாசம் மகன் சதீஸ்குமார் ஆகியோர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதை பார்த்து மேற்படி காவல் நிலையத்தில் CCTV கேமரா பதிவினை கொடுத்து நான் மறுவாக்குமூலம் அளித்தேன். இந்நிலையில் இந்த வழக்கினை விசாரணை செய்த திருவில்லிபுத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் பவுல் ஏசுதாஸ் அவர்கள் சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளோடு கைகோர்த்துக்கொண்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ய காலதாமதம் செய்ததால் நான் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை Crl.O.P(M.D) No. 14568/2020 வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கில் 1 ம் எதிர் மனுதாரர்/1ம் எதிரி காவல் ஆய்வாளர் பவுல் ஏசுதாஸ் அவர்கள் தனது வழக்கறிஞர் மூலம் மேற்படி வழக்கில் ஆஜராகி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய 3 மாதகாலம் அவகாசம் வேண்டும் என கோரினார். மாண்புமிகு நிதியரசர் 3 மாதகாலம் கால அவகாசம் வழங்கினார். ஆனாலும் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் உரிய நேரத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் எனது வழக்கினை விசாரணை செய்த காவல் ஆய்வாளர் தனக்கு கீழ் பணிபுரியும் சார்பு ஆய்வாளர் மூலம் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார். இந்த வழக்கில் 11 வது எதிரியான ஜெயக்கொடி மகன் விஜயராகவன் பெயரை நீக்கி நீதிமன்றத்தில் குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்தார். அதை நான் தெரிந்து கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை மனு தாக்கல் செய்தேன். அந்த மனு Crl.M.P. No. 1642/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரனை நடைபெற்று மேற்படி மனுவானது இந்த வழக்கின் 11 வது எதிரியை வழக்கில் சேர்த்து கூடுதல் குற்ற அறிக்கை, சான்றாவணம், சான்று பொருள் கைப்பற்றி திருவில்லிபுத்தூர் போலீசாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி உத்தரவை தெரிந்து கொண்ட 1ம் எதிர் மனுதாரர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மதிக்காமல், நீதிமன்ற உத்தரவை சட்டப்படி நிறைவேற்ற கடமை இருந்தும் அதை புறந்தள்ளிவிட்டு வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருகிறார். இது நீதிமன்ற அவமதிப்பு வழக்காகும். இது இந்திய தண்டனைச்சட்டம் 166 A ன் படி தண்டனைக்குரிய குற்றமாகும். இது குறித்து நான் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு தென்மண்டல காவல் துணை தலைவர், விருதுநகர் மாவட்ட காவல்

கண்காணிப்பாளர் ஆகியோர்களிடம் புகார் செய்தேன். 1 ம் எதிர் மனுதாரர் இந்த வழக்கில் 11 வது எதிரியை சேர்த்து புலன் விசாரணை செய்து இது நாள் வரையில் சான்று பொருள், சான்றாவணம் கைப்பற்றி குற்ற அறிக்கை தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் கடந்த 15.03.2022 ம் தேதி Crl.M.P.No.1642/2021 பிரகாரம் இந்நீர் 11 வது எதிரியான ஜெயக்கொடி மகன் விஜயராகவன் பெயரை சேர்த்து கூடுதல் விசாரணை செய்து சான்று பொருள், சான்றாவணம் கைப்பற்றி இந்நீர் எதிர் ம னுதாரர்கள் இந்த வழக்கில் மேற்படி எதிரியை 11 வது எதிரியாக சேர்த்து கூடுதல் புலன் விசாரணை செய்து சான்றாவணம் கைப்பற்றி குற்ற அறிக்கை தாக்கல் செய்யவில்லை. இந்நீர் எதிர் மனுதாரர்கள்/எதிரிகள் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ய ஏற்படும் காலதாமதத்தினால் சாட்சிகள், சான்றாவணம், சான்று பொருட்கள் அழிக்க நேரிடும். இந்நீர் எதிர் மனுதாரர்கள்/எதிரிகளின் செயல்கள் அசட்டையான செயல்கள் ஆகும். இதனால் எனக்கு நிரைய கஷ்ட, நஷ்டங்களும், சொல்லமுடியாத துயரம் ஏற்படும். இந்நீர் 1 ம் எதிர் மனுதாரர்/1ம் எதிரி ன் கீழ் பணி புரியும் 2 ம் எதிர் மனுதாரர்/2ம் எதிரி பணிபுரிவதாலும், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் தனது சட்டப்பூர்வமான கடமையை நிறைவேற்றாமலும் தனக்கு கீழ் பணிபுரியும் சார்பு ஆய்வாளர் மூலம் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாலும் சமூகம் நீதிமன்றம் Crl.M.P,.No. 1642/2021 ன் படி 1 ம் எதிர் மனுதாரருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தனது சட்டப்பூர்வமான கடமையை செய்ய தவறியதால் 2 ம் மனுதாரர்/2ம் எதிரி சட்ட விரோத செயலை 1 ம் எதிர் மனுதாரர்/1ம் எதிரி பகரப்பொறுப்பு ஆவார். எனவே கனம் கோட்டார் அவர்கள் எதிர் மனுதாரர்கள்/எதிரிகள் மீது இந்திய தண்டனைச்சட்டம் 166 A பிரகாரம் வழக்கினை கோப்பிற்கு எடுத்து குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிர் மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பி குற்ற நடவடிக்கை எடுக்கும் படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.